**கவனிக்க** .- 2015.01.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1899 - 2015 ජනවාරි මස 23 වැනි සිකුරාදා - 2015.01.23

1899 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 71 |


**கவனிக்க.**- கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் 2014, திசெம்பர் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, சனவரி மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**அனர்த்த முகாமைத்துவ அமைச்சு**

வளிமண்டலவியல் திணைக்களம்

இலங்கை தொழில்நுட்ப சேவையின்
(வானிலை அவதானிப்பாளர்/தொடர்பாடலாளர் பதவிக்காக)
பயிற்சித் தரத்துக்குச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப்
பரீட்சை - 2014 (2015)

வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கான பயிற்சித் தரத்துக்குச் சேர்த்துக்கொள்ள நடைபெறும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமைபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 பதவிப்பெயர்.- அவதானிப்பாளர்/தொடர்பாடலாளர்

1.2 பதவிக்கான கடமைகள் :

* வானிலை தொடர்பான தகவல்களைச் சேகரித்தல் ;
* வானிலை உபகரணங்களைப் பேணுதல் ;
* வானிலை தொடர்பான தரவுகளை வெளிவாரி நிறுவனங்களுக்கு வழங்குதல் ;
* வளிமண்டலவியல் தொடர்பான தரவுகளை இணையத்தில் உள்ளடக்குதல் ;
* விசேட வானிலை நிலைமைகள் தொடர்பாக எச்சரிக்கையுடன் இருத்தல் ;
* திணைக்களத் தலைவரினால் ஒப்படைக்கும் வேறு கடமைகள்.

2. நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனத் திகதி நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் வெற்றிடங்கள் அனைத்தும் அல்லது அதன் ஒரு பகுதியை நிரப்பாமல் இருக்க நியமன அதிகாரிக்கு முடியும்.

**3. சம்பளம் :**

**அட்டவணை இல. 1**

| தரம் | சம்பள அளவுத் திட்டம் | ஆரம்ப மாதச் சம்பளம் |
|---|---|---|
| பயிற்சித் தரம் | இல்லை | 1 ஆவது வருடம் மாதாந்தம் ரூபா 12,920 |
| | | 2 ஆவது வருடம் மாதாந்தம் ரூபா 13,040 |
| | | (பொது. நிரு. சுற்றறிக்கை 06/2006 (II) 14 ஆவது பந்தியின் 9 ஆவது ஏற்பாட்டுக் கமைய) |

| தரம் | சம்பள அளவுத் திட்டம் | ஆரம்ப மாதச் சம்பளம் |
|---|---|---|
| தரம் III | மாதாந்தம் ரூபா 15,005- 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 ரூபா 27,885 (MN3-2006A) | ரூபா 15,005 |
| தரம் II | மாதாந்தம் ரூபா 15,005- 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 ரூபா 27,885 (12 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் ஆரம்பமாகும்) (MN3-2006A) | ரூபா 17,485 |
| தரம் I | மாதாந்தம் ரூபா 15,005- 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 ரூபா 27,885 (23 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் ஆரம்பமாகும்) (MN3-2006A) | ரூபா 21,045 |
| விசேட தரம் | மாதாந்தம் ரூபா 20,030- 11 X 365 - 18 X 500 - ரூபா 33,045 (MN7-2006A) | ரூபா 21,125 |

**4. பதவிக்கான சேவை நிபந்தனைகள் :**

4.1 பயிற்சித் தரத்துக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரர்கள் இரண்டாண்டு பயிற்சியின் பின்னர் தோற்ற வேண்டிய தகுதி நிலைகாண் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தின் வளிமண்டலவியல் அவதானிப்பாளர்/தொடர்பாடலாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர் ;

4.2 இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். இந்த நியமனம் 3 வருடகால தகுதிகாண் நிலை காலத்துக்கு உட்படும் என்பதுடன் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றத் தகவுடையவராக இருத்தல் வேண்டும். இந்த வர்த்தமானி யின் ஆரம்பத்தில் உள்ள அரச சேவைக்கு நியமித்தல் சம்பந்தமான பொது பிரமாணக் குறிப்புகளுக்கும் அதன் மீது அடிக்கடி மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அரச சேவைகள்

ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கும் தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணம் ஆகியவற்றுக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் இணங்கியொழுகுதல் வேண்டும் ;

4.3 அரச கரும மொழி அல்லாத மொழி மூலம் சேர்த்துக்கொள் ளப்படும் உத்தியோகத்தர்கள் நியமனம் பெற்ற திகதி முதல் 3 வருட காலத்துக்குள் அரச கரும மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். குறிப்பிட்ட காலத்தில் இந்தப் பரீட்சையில் சித்தியடையத் தவறுமிடத்து அடுத்த சம்பள ஏற்றம் பிற்போடப்படும் ;

4.4 நிரந்தர நியமனத் திகதி தொடக்கம் 5 வருடங்களுக்குள் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் சுற்றுநிருபம் 1/2014 இல் காட்டப்பட்டுள்ளவாறு பதவி மட்டத்துக்கு ஏற்றவகையில் இரண்டாவது அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் அந்தத் தேர்ச்சியைப் பெறத்தவறும்போது அந்தத் தேர்வில் சித்தியடையும் வரை சம்பள ஏற்றம் நிறுத்தப்படும் ;

4.5 இரண்டு வருட பயிற்சியை முழுமையாகப் பூர்த்திசெய்வ தாகவும் இரண்டு வருட பயிற்சியின் பின்னர் 5 வருடம் திணைக்களத்தில் பணியாற்றுவதாகவும் திணைக்களத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ள வேண்டும் என்பதுடன் அவர் பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட திகதியின் பின்னர் பயிற்சியை விட்டுச் சென்றால் அல்லது ஒப்பந்தம் செய்துகொண்ட காலம் வரை திணைக்களத்தில் பணியாற்றத் தவறின் பயிற்சிக்காக அரசுக்குச் செலவான பணத்துடன் 2,50,000 ரூபாவையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்குச் செலுத்துவ தாக திணைக்களம் ஏற்றுக்கொள்ளும் பிணையாளர்கள் இருவரின் உத்தரவாதத்துடன் முறியொன்றை பயிற்சி ஆரம்பிப்பதற்கு முன்னர் கைச்சாத்திட வேண்டும் ;

4.6 கடமை நேரங்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொதுவான அலுவலக நேரமாக அமையாது என்பதுடன் இரவு பகல் இரண்டிலும், சனிக்கிழமை மற்றும் ஞாயிறு உட்பட அரச விடுமுறை தினங்களிலும் கடமை நேரங்களாக விளங்கும் முறைமாற்று கடமை ஒப்படைப்புக்கு அமையவும் பணியாற்ற வேண்டும் ;

4.7 தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் நாட்டின் எந்தப் பிரதேசத்திலேனும் பணியாற்ற வேண்டும்.

5. **தகைமைகள் :**

5.1 ***அடிப்படைத் தகைமைகள் :***

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக்குறைந்தபட்ச வயது 18 ஆகும் என்பதுடன் ஆகக்கூடிய வயதெல்லை 30 ஆகும் ;

(இதற்கிணங்க 1997.02.27 ஆந் திகதிக்கோ இதற்கு முன்னரோ 1985.02.27 ஆந் திகதிக்கோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்த தினத்தை உடையவர்களுக்கு மாத்திரம் இது சம்பந்தமாக விண்ணப்பிக்கும் தகைமையுண்டு.)

5.2 ***கல்வித் தகைமைகள் :***

(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் (6) பாடங்களில் க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

மற்றும்

(ஆ) 3 பாடங்களில் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் ;

பின்வரும் பாடங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் :

(1) பௌதீகவியல், தூயகணிதம், பிரயோக கணிதம்

(2) பௌதீகவியலுடன்,

(i) தூயகணிதம்/பிரயோக கணிதம்/இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்று ;

மற்றும்

(ii) இரசாயனவியல்/விவசாயம்/தகவல் தொழில் நுட்பம்/ கணினியியல் ஆகிய பாடங்களில் ஒன்று.

5.3 ***உடற்தகைமைகள்.***- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எந்தப் பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் தனது பதவியில் கடமைகளை மேற்கொள்வதற்கும் போதுமான உடற்தகுதி மற்றும் சிறந்த மனநிலையையும் கொண்டிருத்தல் வேண்டும். சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் நடாத்தப்படும் மருத்துவப் பரீட்சையில் தகுதியற்றவர் என உறுதிப்படுத்தப் பட்டால் பதவிக்குப் பொருத்தற்றவர் எனக் கருதப்படுவார்.

குறிப்பு.- அனைத்து விண்ணப்பதாரர்களது பதவிக்கான தகைமையை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்திசெய்தல் வேண்டும்.

6. **பரீட்சை விதிமுறைகள்.**- இரண்டு பாடங்களைக் கொண்ட எழுத்துமூலப் பரீட்சையாகும். இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும் என்பதுடன் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.

| | பெற்றுக் கொள்ளக் கூடிய மொத்தப் புள்ளிகள் | சித்தியடை வதற்காக பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| (i) நுண்ணறிவு | 100 | 40% | 1 மணித்தியாலம் |
| (ii) விடயத்துடன் தொடர்பான தொழில்நுட்ப வினாப் பத்திரம் | 100 | 40% | 2 மணித்தியாலம் |

7. **பாடவிதானம் :**

(i) *நுண்ணறிவு*.- இந்தக் கேள்விப்பத்திரம் பரீட்சார்த்தியின் சிந்தனை ஆற்றல், தர்க்க அடிப்படையிலான திறமை, பகுப்பாய்வு செய்யும் திறமை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் வகையில் பல்லின மற்றும் சுருக்கமாக பதில் வழங்கும் விதத்திலான 50 கேள்விகளைக் கொண்டிருக்கும் என்பதுடன் சகல கேள்விகளுக்கும் பதில் வழங்குதல் வேண்டும் ;

(ii) *விடய ஆய்வு தொழில்நுட்ப கேள்விப்பத்திரம்*.- பௌதீகவியல் விடயத்துடன் தொடர்பான க. பொ. த. (உயர்தர) பரீட்சை மட்டம் மற்றும் அதுவரையிலான பொறியியல் அலகுகளும் பரிமாணங்களும், அதிர்வும் அலைகளும், வெப்பவியல் மற்றும் மின்புலம், சடத்தின் பொறியியல் இயல்புகள் பற்றிய அறிவினைத் தீர்மானிக்கும் கேள்விகளைக் கொண்டிருக்கும் என்பதுடன் அனைத்து கேள்விகளுக்கும் பதில் வழங்க வேண்டும்.

8. **தெரிவுசெய்யும் விதிமுறை :**

8.1 எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களுள் நிரப்ப எதிர்பார்க்கும் வெற்றிடங்களுக்குச் சமமான விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை பெறுபேறுகளின் திறமையின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். (நேர்முகப் பரீட்சையின்போது தகைமைகளை நிரூபிக்க முடியாத விண்ணப்பதாரர்கள் பரீட்சையில் உரிய தகுதியைப் பெற்றிருப்பினும் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.)

9. **ஆட்சேர்ப்பு**.- பயிற்சித் தரத்துக்குச் சேர்த்துக்கொள்ளப்படுபவர்கள் இரண்டு வருட பயிற்சிக்குப் பின்னர் நடைபெறும் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் III ஆந் தரத்துக்கு நியமிக்கப்படுவார்கள்.

10. **விண்ணப்பங்களைத் தயார்செய்தல் :**

10.1 விண்ணப்பங்களைத் தாம் தோற்றும் மொழி மூலம் தயார் செய்தல் வேண்டும் ;

10.2 சிங்களத்திலும் தமிழிலும் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயரை அந்த மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும் ;

10.3 இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்துக்கு அமைய 21 x 29 செ. மி. (ஏ4) அளவிலான கடதாசியின் இரு மருங்கையும் பயன்படுத்தி தம்மால் விண்ணப்பப்பத்திரத்தை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். இல. 1 தொடக்கம் 4(ஆ) வரையிலான தலைப்புக்கள் 1 ஆவது பக்கத்திலும், இல. 4(இ) - 9.3 வரையிலான தலைப்புக்களை 2 ஆவது பக்கத்திலும், இல. 10 - 15 வரையிலான தலைப்புக்களை 3 ஆவது பக்கத்திலும், தலைப்பு 16 - 17.3 வரையிலான தலைப்புக்களை 4 ஆவது பக்கத்திலும் உள்ளடக்கி விண்ணப்பத்தை தயாரித்தல் வேண்டும்.

11. **விண்ணப்பங்களை நிரப்புதல் :**

11.1 விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் நிரப்ப வேண்டும் ;

11.2 தோற்றும் மொழிமூலத்தை மாற்ற பின்னர் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதனால் அதனை உரியவாறு பூர்த்திசெய்ய வேண்டும் ;

11.3 பரீட்சை நிலையங்களை அட்டவணை இல. 2 இல் உள்ளபடி குறிப்பிடல் வேண்டும். பரீட்சை நிலையத்தைப் பின்னர் மாற்ற இடமளிக்கப்படாதபோதிலும் ஏதேனும் நிலையத்துக்குப் போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாதவிடத்து அந்த நிலையம் இரத்துச்செய்யப்பட்டு பரீட்சார்த்திகள் அண்மித்த பரீட்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் ;

11.4 பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை கீழ் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டுதல் வேண்டும் ;

11.5 விண்ணப்பத்தில் பரீட்சார்த்தியின் ஒப்பத்தை அரச கல்லூரியின் அதிபர், சமாதான நீதிபதி, சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட ஆளணியினர், பகிரங்க நொத்தாரிசு, முப்படையில் அதிகார நிலையிலான உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பெயர் குறிப்பிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் பொது நிர்வாக சுற்றறிக்கையில் 06/2006 இல் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை மற்றும் சிரேஷ்ட மட்டத்தில் அரச சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிப்பவர் ஆகிய எவரேனுமொருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

11.6 **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக எவரேனுமோர் விண்ணப்பதாரருக்கு தகைமையில்லை என அறியவந்தால் அல்லது வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல் தவறானதென தான் அறிந்திருந்தும் அதனை வழங்கியிருப்பின் பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் அறியவந்தால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அவரது தகைமை இல்லாமல் செய்யப்படும் என்பதுடன் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் அறியவந்தால் அவரை சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் :**

12.1 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை 2015, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்பிவைத்தல் வேண்டும் ;

12.2 விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

12.3 தற்போது அரச சேவை அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர் ஊடாகவும் அரச கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் பணியாற்றுபவர்கள். தமது நிறுவனத் தலைவர் மூலமாகவும் குறிப்பிட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

12.4 விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - வளிமண்டலவியல் திணைக்களம்'' எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

12.5 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியொன்றை வைத்திருத்தல் பெரிதும் பயன்படும்.

**13. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் அனுமதி அட்டைகளை வழங்குதல் :**

13.1 குறிப்பிட்ட மாதிரிப்படிவத்துக்கு இணங்க அமையாத, குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப் படாத, உரியவாறு பூர்த்திசெய்யப்படாத, பூரணமற்றதாக காணப்படும் விண்ணப்பங்கள் எத்தகைய முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யப்படாமையினால் ஏற்படும் இழப்பினை விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது மிகவும் பிரயோசனமாக அமையும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை பரீட்சை அறிவித்தலில் காட்டப்படும் விண்ணப்பத்துக்கு இணங்க இருக்கின்றதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரரே ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் ;

13.2 விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் காணாமற்போன விண்ணப்பங்கள் சார்பான முறைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது ;

13.3 இந்த அறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள வயதுக்குட்பட்ட வர்களுக்கு, விண்ணப்பப்படிவம் கிடைக்கவேண்டிய தினத்திலோ அல்லது அத்தினத்திற்கு முன்னரோ, பரீட்சைக்கான பணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டு பிழையின்றி பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்பட்டு, போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளரினால் இடமளிக்கப் படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கான அனுமதி அட்டை வழங்கப்படுதல் விண்ணப்பதாரருக்கு இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது இந்தப் பரீட்சைக்கான தகைமை பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானப் பத்திரத்துக்கமைய தகைமையைப் பெற்றுள்ளார்களா என பரிசீலிக்கும்போது உரிய தகைமைகள் இல்லையென அறியவருமிடத்து அவர்கள் தெரிவுசெய்யப்பட மாட்டார்கள் ;

13.4 விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்ட மறுகணமே அது தொடர்பாக பத்திரிகை அறிவித்தலொன்றை பரீட்சைத் திணைக்களம் வெளியிடும். அறிவித்தல் விடுக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டவாறு அதனைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுப் பிரதியையும் விண்ணப்பத்தையும் தபாலில் அனுப்பும்போது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டினை யும் உள்ளடக்கி உங்களது பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்துடன் பரீட்சையின் பெயரை சரியாகக் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்திடம் வினவலாம். நீங்கள் கொழும்புக்கு வெளியில் உள்ள விண்ணப்பதாரராக இருப்பின் மேற்கூறிய விபரங்களுடன் தொலைநகல் மூலம் அனுமதி அட்டையின் பிரதியொன்றைப் பெறுவதற்காக உங்களது தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு அது தொடர்பான கோரிக்கையைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பிவைக்க முடியும்.

**14. பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் 750 ரூபாவாகும். இந்தப் பணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் செலவுத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் அரசாங்க வருமானத்திற்கு வரவு வைத்து நாட்டில் உள்ள ஏதாவது ஒரு தபால்/ உப தபால் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெறப்பட்ட பற்றுச்சீட்டை ஒரு முறை மடித்து விண்ணப்பப்படிவத்தில் கழன்றுவிடாதவண்ணம் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்காக மணி ஓடரோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணமானது எக்காரணத்தைக் கொண்டும் மீள்செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றுவதற்கோ முடியாது. பற்றுச்சீட்டின் நகல் (போட்டோ) பிரதியைத் தம்முடன் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும்.

**15. பரீட்சைக்குத் தோற்றுதல் :**

15.1 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தை உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். பரீட்சை நிலையத்தின் பரீட்சை மண்டபத்துக்குப் பொறுப்பாக இருப்பவரிடம் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையை வழங்குதல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற முடியாது ;

பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்ட மண்டபத்தில் பரீட்சை எழுதுதல் வேண்டும் ;

15.2 பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி பிறப்பிக்கும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் உட்பட்டு நடத்தல் வேண்டும். அத்தகைய சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் விதிக்கும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்பட நேரிடும்.

**16. பரீட்சார்த்தியின் அடையாளம்.**- பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றவேண்டிய அனைத்துப் பாடங்களும் தொடர்பாக பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்காகப் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் செல்லுபடியான தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

17. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்தினால்

தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்பட வேண்டும்.

18. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் வெளிவரும் இந்த அறிவிப்பில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவிப்பின்படியே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

லலித் சந்ரபால,
வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகம்.

வளிமண்டலவியல் திணைக்களம்,
பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07,
2015.01.23.

**அட்டவணை - 2**

பரீட்சை நிலையங்களின் பெயரும் இலக்கமும்

| பரீட்சை நிலையத்தின் பெயர் | பரீட்சை நிலையத்தின் இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| குருநாகல் | 04 |
| அநுராதபுரம் | 05 |
| இரத்தினபுரி | 06 |
| பதுளை | 07 |
| யாழ்ப்பாணம் | 08 |
| வவுனியா | 09 |
| மட்டக்களப்பு | 10 |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வளிமண்டலவியல் திணைக்களம்**

இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையின் வளிமண்டலவியல் அவதானிப்பாளர்/ தொடர்பாடலாளர் பதவிகளுக்கான பயிற்சியாளர் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2014

**Open Competitive Examination for Recruitment to the Post Meteorological Observers/ Communicators (to the Training Grade) of the Sri Lanka Technological Service of the Department of Meteorology - 2014(2015)**

* பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :-

சிங்களம் - 2
தமிழ் - 3

(கூட்டிற்குள் குறிப்பிட்ட இலக்கத்தினை எழுதவும்.)

* பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் பரீட்சை நிலையமும் பரீட்சை நிலைய இலக்கமும் :

| விருப்பு இலக்கம் | பரீட்சை நிலையம் | பரீட்சை நிலைய இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

